ஊர் நீதிமன்றங்களைத் தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதன் அடிப்படையில்தான் சட்டம் தயாரிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த ஊர் நீதிமன்றங்களைத் துவக்குவது உயர் நீதிமன்றத்தின் சௌகரியத்திற்காக அல்ல ; ஜனங்களின் சௌகரியத்திற்காகத்தான். ஆகவே, மேலும் தாமதிக்காமல் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மக்களின் வசதிக்காகத்தான் ஊர் நீதிமன்றங்களைத் துவக்க முடிவு செய்தோம். அதுபற்றி உயர் நீதிமன்றத்தின் கருத்தை அரசு பெற்றுள்ளது. கொஞ்சம் காலதாமதம் ஆனாலும் அவர்களுடைய கருத்தை ஆராய்ந்து நடத்தினால் நல்ல முறையில் செயல்படுத்த முடியும் என்று கருதுகிறோம்.

Sales tax on food articles

* 467 Q.—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Revenue be pleased to state :

(a) whether it is a fact that the Coimbatore Chamber of Commerce pleaded for the removal of sales tax on food articles about the 18th June 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. (இ) இக்கேள்வி எழுவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பொதுவாக உணவுப் பண்டங்களின் விற்பனை வரியை ரத்து செய்வதை பொதுமக்கள் விரும்புகிறார்கள். அதனால் கொஞ்சம் விலை குறையும் என்பது அவர்கள் எண்ணம். அதுமட்டுமல்ல. ஒருமுனை வரியை கொண்டுவருகின்ற நேரத்தில் இதைப் பரிசீலித்து, உணவுப் பண்டங்களின் விற்பனை வரியை விலக்க முயற்சி மேற்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 'உணவுப் பொருட்கள்' என்றழைக்கப்படக்கூடிய உணவு தானியங்கள் (கோதுமை கோதுமைப் பொருட்கள் நீங்கலாக) பால், உப்பு, காய்கறிகள், உருளைக்கிழங்கு, புதிய பழங்கள், முட்டைகள், இறைச்சி, மீன் (டப்பியில் அடைக்கப்பட்ட இறைச்சி, மீன் நீங்கலாக) இறைச்சிக்கான செம்மறியாடு, வெள்ளாடு, பிற பிராணிகள், தேங்காய் ஆகிய பல பொருட்களுக்கு அரசு வரி விதிப்பிலிருந்து விலக்களித்துள்ளது. கோதுமை, கோதுமைப் பொருட்கள் மீதான வரி ஒரு சதவீத பலமுனை வரியாகக் குறைக்கப்பட்டுள்ளது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வகைகள் ஆகியவை 3½ சதவிகித பலமுனை வரி விதிப்புக்குட்பட்டவையாகும். உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றின் வியாபாரமும் 3½ சதவிகித பலமுனை வரி விதிப்புக்குட்பட்டதாகும். அரசாங்கம் சில பொருட்களுக்கு வரி சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. மேலும் சில சலுகைகளை கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது. சில பொருட்களுக்கு தற்காலிகமாக வரி விலக்களிக்கப்பட்டது, இந்தமாத கடைசிவரை அமுலில் இருக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டங்களுக்குத் தான் அவர்கள் அதிகமாக செலவிடுகிறார்கள். ஆகவே, ஒரு நல்ல அரசாங்கம் சாதாரண மக்களுக்கு உணவுப்பண்டங்களைக் குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை. அதன் பேரில்தான் ஏற்கெனவே ரூபாய்க்கு படி அரிசி போடுவது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இப்போது உணவு உற்பத்தி அதிகமாக இருப்பதால், மக்களுடைய நலனைக் கருதி. உணவுப் பண்டங்களின்மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்யும் யோசனையை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கெனவே சொல்லியதுபோல இப்போது சில உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரி இல்லை; சில பொருட்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் நன்மையைக் கருதித்தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

[1973 நவம்பர் 28

திரு. கே. டி. கே. தங்கமணி : சில பொருள்களுக்கு வரிச்சலுகை அளித்தும் கூட எந்தவிதமான விலைக் குறைப்பும் அந்தப் பொருள் களைப்பொறுத்து இல்லை, ஆகவே, வரிச்சலுகையை எடுத்துவிட்டு, அந்தப் பொருள்களின் விலைகள் குறைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பதன் மூலம் பொருள்களின் விலையைக் கட்டுப் படுத்த பயன் ஏற்படும் என்றே செய்யப்பட்டிருக்கிறது. பொருள் களின் விலை உயர்வைப்பற்றிச் சொன்னார்கள். அதற்குத் தனி யாகக் கேள்வி போட்டால் உணவு அமைச்சர் பதில் சொல்வார்.

திரு. கே. என். குமாரசாமி : அமைச்சர் அவர்கள் பதில்சொல் கிறபோது எண்ணெய்க்கு 3 சதவீத வரி போட்டிருப்பதாகச் சொன் னார்கள். ஏற்கனவே, எண்ணெய்விலை லிட்டருக்கு 7 ரூபாய், 8 ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. 3 சதவீத வரி என்று வேறு போடுவதனால், விலை உயர்ந்து சாதாரண மக்கள் எண்ணெய் வாங்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே, அந்த 3 சதவீத வரியை ரத்து செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு தங்கமணி அவர்கள் கேள்வியே இந்தக் கேள்விக்குப் பதிலாகிவிடும். வரி விதிப்பினால் பொருள்களின் விலை உயர்கிறது என்று சொல்வதற் கில்லை. ஓரளவு விலையைக் கட்டுப்படுத்தத்தான் சில பொருள் களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

கருவேலங்குளம் ஆக்கிரமிப்பு

* 468 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், மஞ்சாநாய்க்கன்பட்டி கிராமத் திலுள்ள கருவேலங்குளத்தை தனியார் எவரேனும் ஆக்கிரமித்து உள்ளாரா ?

(இ) அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குக் கோரிக்கை ஏதேனும் பொது மக்களிடமிருந்து வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?